

குருமரபு சிவஞானி மரபுமுறை தொடராகும்
குன்றிலிட்ட விளக்காகி மூத்ததாய் தமிழ்ஞானம்
அருள்பொங்கும் ஆதீனத் தெய்வீக ஆன்மீகம்
ஆளுகின்ற வரிசையில் பத்தொன்பதாம் சந்நிதானம்
குருபீடம் நூற்றாண்டுப் பொற்காலம் போற்றுகிற
திருவிழாவும் நினைவூட்டும் கொண்டாடும் ஞானியரே
இருபதாம் பட்டத்து ஆதீனம் ஆளுகையின் சீராகும்
ஈடில்லா மாமுனிவர் பாரறிந்த வரலாறு.

- செந்தமிழ் சிவஞான மாமுனிவர் பாமாலை
- கவிஞர் தாமரைக்குளம் செல்லப்பாண்டியன்

ISBN 978-93-85508-22-6
9 789385 508226

19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா
ஆய்வுக் கோவை

மயிலம் பொம்மபுர ஆதீனம்

**19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்**
**நூற்றாண்டு விழா**

# ஆய்வுக் கோவை

மத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரியும்,
துவைப் பல்கலைக்கழகம் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலமும்
ணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

**தொகுதி-1**



வெளியீடு
மயிலம் பொம்மபுர ஆதீனம்
2025

Scanned with CamScanner

## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஆய்வுக் கோவை (தொகுதி - 1)<br>மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம்<br>குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா |
| தொகுப்பு & பதிப்பு | : | நல்லாவூர்<br>முனைவர் ச. திருநாவுக்கரசு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2025 |
| உரிமை &வெளியீடு | : | மயிலம் பொம்மபுர ஆதீனம்<br>மயிலம் - 604 304<br>தொலைபேசி எண்: 8903879223<br><br>பொம்மையபாளையம்<br>தொலைபேசி எண்: 0413-655188 |
| பொருள் | : | இலக்கியம் |
| தாள் | : | மேப்லித்தோ வெள்ளை |
| அளவு | : | டெம்மி |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 34 + 510 (1100-இரண்டு தொகுதிகள் சேர்த்து) |
| விலை | : | ரூ.800/- (இரண்டு தொகுதிகளும்) |
| படிகள் | : | 1000 |
| அச்சிட்டோர் | : | புரொபஷ்னல் பிரிண்டர்ஸ்<br>புதிய எண் 9, எண். 5, பாலாஜி நகர்,<br>ஐயம்பெருமாள் தெரு, இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>9443403134 |
| ISBN எண் | : | 9 789385 508226 |

**நூலாக்கக் குழு**

முனைவர் உ. சிவசுப்ரமணியன், திரு. இரா. குமார், முனைவர் நீ. காஞ்சனா, முனைவர் க. இலட்சுமிதேவி, முனைவர் அ. சதீஷ், முனைவர் இரா. வள்ளி, முனைவர் கி. புஷ்பா, முனைவர் ஞ. சுபஸ்ரீ, முனைவர் ந. அய்யனார்

Scanned with CamScanner

65. சிவன் - முருகன் - சிவஞானி
கண்ணியம் முனைவர் அ. சதீஷ் 321

66. வீரசைவநெறியின் திறவுகோல்- திருநீறு சிவஞான முனிவர்
முனைவர் த.விஜயலட்சுமி 335

67. அருள்மிகு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் - ஓர் உளவியல் கண்ணோட்டம்
முதுமுனைவர் அ.இராஜலட்சுமி 340

68. குருஞானிகள்
அ.ஜெயந்தி 347

69. மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத் தமிழில் அணி நலன்கள்
முனைவர் த.கீதாஞ்சலி 352

70. குருவருள் - முருகன் அருள் வேட்டல்
முனைவர் ஜா. கிரிஜா 358

71. ஸ்ரீ சிவஞான பாலயதேசிகர் நெஞ்சுவிடுதூதின் அமைப்பும் சிறப்பும்
முனைவர் கு.கோமதி 363

72. சோணசைல மாலையில் காணும் அணிகள்
புலவர் அ,வைத்திலிங்கம் 369

73. மூதறிஞர் அடிகளாசிரியர் பதிப்பித்த சிவப்பிரகாசர் நூல்களில் சிவநாம மகிமை
முனைவர் சி,பழனியாண்டி 375

74. சித்தி தரும் சிவஞான தேவன்
முனைவர் இரா. வள்ளி 379

75. வீரசைவ நோக்கில் நால்வர் நான்மணிமாலை உணர்த்தும் குரவர்கள்
சூ.ஜோஸ்பின் மாலதி 385

76. பரிபூரண குரு - சிவஞானி
ச. யுவராணி 392





77. சாணக்கிய நீதியும் நன்னெறியும் 397
முனைவர் ந.சரவணன்

78. குருமகாசந்நிதானங்களின் மகிமைகள் 401
நல்லாசிரியர் முனைவர் தி,சு. நாகராஜன்

79. திருவருளே குருவருள் - நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் 410
முனைவர் மு. சுமதி

80. குருவருள் மரபும் சிவஞான பாலய சுவாமிகளின் பங்களிப்பும் 415
முனைவர் சே.பத்மினி, பத்மினி பாலா

81. ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தின் கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் 421
திரு. சு.கோபாலகிருஷ்ணன்

82. பிறப்பறுக்கும் சிவஞானி 428
முனைவர் அ. கீதா

83. நவமணியாம் சிவஞான பாலய சுவாமிகள் 433
முனைவர் சு. தொண்டியம்மாள்

84. சிந்தை நிறை சிவஞானி ! 437
சு. சொக்கலிங்கம்

85. ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் புரட்சித் துறவி வள்ளலார் ஒப்பீடு 444
முனைவர் த.ராஜீவ் காந்தி

86. கலம்பக நோக்கில் 'சிவனே சிவஞானி' 456
முனைவர் கி. சிவகுமார்

87. மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் தமிழ் பணிகள் 462
முனைவர். இரா. பூங்குழலி

88. வீரசைவ மரபில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 467
முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட்

89. வீரசைவ மரபில் மயிலம் பொம்மபுர ஆதீனம் 472
முனைவர் அ.சாந்தி


Scanned with CamScanner

# மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் அணி நலன்கள்

முனைவர் த. கீதாஞ்சலி,
உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம் கொள்ளத்தக்க என பெருமைபெரும் பிரிவுகளுக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வளர்ச்சி பெற்ற ஒரு தனித்துவமான இலக்கிய வகையே சிற்றிலக்கியம் ஆகும். இப்பிரிவு தமிழில் பிரபந்தம் என்றும் அழைக்கப்படுகிறது. பொதுவாக கி.பி 15ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் தமிழகத்தில் தோன்றிய குறுநில மன்னர்கள், ஜமீன்தாரர்கள், மடங்களின் தலைவர்கள் ஆகியோரைச் சிறப்பித்துப் பாடும் நோக்கத்துடன் இவை பெருமளவில் எழுதப்பட்டன.

சிற்றிலக்கிய வகைகளில் மிகவும் சிறப்பானதும், அழகுணர்ச்சியும், கவிநயமும் மிக்கதுமாக விளங்குவது பிள்ளைத்தமிழ். இது கடவுளையோ, அரசனையோ, வள்ளலையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அத்தலைவரின் குழந்தைப்பருவத்தைக் குறித்துப் பாடப்படும் ஒரு தனித்துவமான சிற்றிலக்கிய வகை ஆகும். சிற்றிலக்கியங்களுக்கு முன்னோடியாக குலோத்துங்கன் பிள்ளைத்தமிழும், பெண்பாற் பிள்ளைத்தமிழில் சிறந்ததாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், ஆண்பாற் பிள்ளைத் தமிழில் சிறந்ததாக முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும் விளங்குகிறது.

அந்த வரிசையில் முருகனைப் போற்றி முனைவர் மு வல்லாளன் அவர்கள் பாடிய மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. இந்த பிள்ளத்தமிழில் கற்பனைச் சிறப்பு, அணிநலன், பொருள்நலன், மொழிநடை முதலிய இறையுணர்வு,தமிழுணர்வு, தலவரலாற்றுக் குறிப்புகள் போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய சிறந்த நூல் என்றாலும் இந்நூலில் காணப்படும் அணிநலன்கள் குறித்து எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.



## மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் அறிமுகம்

பெரும்பாலும் பிள்ளைத்தமிழ் நூல்கள் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் என நூறு பாடல்களைக் கொண்டு அமையும். சில பிள்ளைத்தமிழ் நூல்கள் பருவத்திற்கு ஒரு பாடல், மூன்று பாடல்கள், ஐந்து பாடல்கள் என முப்பது பாடல்களைக் கொண்டோ ஐம்பது பாடல்களைக் கொண்டோ அமைவதுண்டு. இது போலவே பாடல் எண்ணிக்கை, பருவ எண்ணிக்கை முதலியவற்றில் மிகுதியாகக் கொண்ட பிள்ளைத்தமிழ் நூல்களும் ஒரு சில உள்ளன. அவற்றுள் ஒன்று மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் நூலாகும். இதை ஆக்கியோர் முனைவர் மு வல்லாளன் ஆவார். இந்நூல் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என பத்துப் பருவங்கள் அமைந்த நூலாகும். ஒவ்வொரு பருவத்திலும் பத்துப் பத்துப் பாடல்களாக மொத்தம் நூறு பாடல்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

## அணிநலன்

அணி என்பது பொதுவாக அழகு எனப் பொருள்படும். செய்யுள் அல்லது கவிதைக்கு அழகையும், சுவையையும், ஆழத்தையும் கொடுக்கும் ஓர் இலக்கண முறையாகும். ஒரு பெண்ணுக்கு அணிகலன்கள் எப்படி அழகைத் தருகின்றனவோ, அதேபோல ஒரு செய்யுளுக்கு அணி இலக்கணம் அழகைத் தருகிறது. அதனால்தான் பவணந்தி முனிவர்,

**மாடக்குச் சித்திரமும் மாநர்க்குக் கோபுரமும்**
**ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும் போல**

என்று சுட்டுகிறார். கவிஞர் தான் கருதிய பொருளைப் பிறருக்கு எளிதாக உணர்த்தவும் அவர்களின் மனதை ஈர்க்கவும் பயன்படுத்தும் உத்தி முறைகளில் சிறந்தவை அணியாகும். "கவிஞர்களுக்குத் தம் கருத்தை தெளிவாகவும் விளக்கமாகவும் உரைத்தற்குத் துணையாக இருப்பவை அணிகள்" எனச் சுப்புரெட்டியார் குறிப்பிடுவார். இவ்வணிகள் படிப்பவர்களுக்கு மிகுந்த இன்பத்தைத் தரவல்லன. தண்டியலங்கார ஆசிரியர் அணிகளைச் சொல்லணிகள், பொருளணிகள் என இரண்டாகப் பிரித்துக் கூறுகிறார். இவர் குறிப்பிடும் அணிகளில் பல மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் அமைந்து அழகு செய்கின்றன.

Scanned with CamScanner

அவற்றுள் குறிப்பிடத்தக்கன உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், வேற்றுமையணி என்பனவாகும்.

**உவமை அணி**

உவமையணி என்பது ஒரு புலவர் தான் பிறருக்குக் கூறக் கருதிய பொருளை அவருக்கு நன்கு தெரிந்த ஒன்றைக் காட்டி விளக்குவது ஆகும். அது ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவதாகும்.

**பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை**

என்ற நூற்பா விளக்குகிறது. தண்டியலங்காரம் குறிப்பிடும் பொருளணிகள் 35 இல் தலைமை அணியாக உவமை அணி அமைவதாலும் இந்த அணியிலிருந்தே பிற அணிகள் தோன்றுவதாலும் இந்த அணியைத் தாய் அணி என்றும் அழைப்பர். மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் ஆசிரியர் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். இவரின் உவமைகள் மரபு உவமை, இயற்கை உவமை, தொகை உவமை, உவம உருபுகள் எனப் பல வகைகளில் பிரித்துக் காணத்தக்கதாகும்.

**மரபு உவமை**

ஒரே எடுத்துக்காட்டைக் கூறுதல் பொதுவாக தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பொது இயல்பு எனலாம். பழங்காலம் தொட்டு இன்று வரை வழிவழியாக ஒன்றையே ஒன்றிற்கு உவமையாகக் கூறுவதே மரபுநிலை உவமையாகும். தொல்காப்பியர் உவமப்போலியில் குறிப்பிடும், இதற்கு இதுதான் உவமை என்று கூறுவது மரபு உவமத்திற்குப் பொருந்தும். விரல்களுக்குக் காந்தள் மலரையும், மேனியின் நிறத்திற்கு பொன்னையும் முகத்திற்கு வெண்ணிலவும், இதழ் அழகிற்குப் பவளத்தின் நிறத்தினையும், தோள்களுக்கு மணியினையும், திருவடிகளுக்குத் தாமரையினையும், புன்முறுவலுக்கு முல்லைமலரையும் ஒப்பிடுவது மரபு. அவ்வகையில்

**மென் காந்தள் விரலினால்பொன் மேனியினைத் தடவி-பா.2**

**வெண்ணிலவு முகமாட பவளவிதழ் நெற்றியுடன்**
**குறுவியர்வை முத்தாடவும்**
**மணிதோள்கள் ஆடிடவும் -பா.18**



**தாமரை பூவடி தரையினில் ஊன்றிடச்**
**சிவந்திடும் மெல்ல வருக**
**முல்லையின் பூவென முகிழ்ந்திடும் முறுவலால்**
**சர்க்கின்ற முகத்த வருக**
**மலர்க்கை போலல்லி, இதழ்போல் விரல்கூரும்**
**மருவிய அழக வருக - பா.56**

என இப்பாடல்களில் மரபு உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இயற்கை உவமை**

மனிதனின் முயற்சியும் ஆக்கமும் இன்றி இயல்பாக அமைந்தவற்றை இயற்கைப் பொருள்கள் என்று கூறலாம். இவ்வியற்கையை ஒன்றிற்கு உவமையாகக் கூறுமிடத்து அதனை இயற்கை உவமை என்பர். இவை மட்டுமல்லாது இயற்கையாக நடைபெறுகின்ற நிகழ்ச்சியை உவமையாகக் கூறுமிடத்தும் இயற்கை உவமை அமைவதுண்டு. அவ்வகையில் சூரியன், மலர், கடல், மலை, குன்றம், பிறை போன்றவை இயற்கை உவமைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக,

**நீங்கலரும் குணம் சேர்ந்திடும் ஞாயிறு போல -பா.27**
**மலர்க்கையது மடக்கிய மற்றுமொரு..-பா.18**
**வெற்றுரைகள் கடல்சுருதிப் பிடிப்பன்ன - பா.27**
**மாமலையிலென மண்சுத்தி மோர்ந்ததுபோன்..- பா.16**
**தேன்துளிர் மயிலக் குன்றமதில்-(விநாயகர் துதி)**
**பிறையின் கோடும் முறஞ்செவிசேர்...-(விநாயகர் துதி)**

ஆகிய பாடல்களில் இயற்கை உவமை கையாளப்பட்டுள்ளது.

**தொகை உவமை**

உவமையில் அமையும் உருபுகளை நீக்கி உவமையையும் பொருளையும் தனித்தனியே காட்டுவது தொகை உவமை எனப்படும். தேன்துளிர், பொற்றெய்வ, துளைகரத்தான் (விநாயகர் துதி) மாமலையிலென (பா.16), மலர்க்கய (பா.18), நல்மணிப்பதம் (பா.27), போன்ற பல தொகை உவமைகள் இந்நூலில் பயின்று வருகின்றன.

**உவமஉருபுகள்**

உவமையையும் பொருளையும் இணைக்கும் சொற்கள் உவமஉருபுகள் எனப்படும். தொல்காப்பியர் 38 உவம உருபுகளைக் குறிப்பிடுகின்றார். "மாமலையிலென மண்சுத்தி மோர்ந்ததுபோன்..- பா.16, "நல்மணிப் தபன்போல அன்பர் நெஞ்சில்.."-பா.27,

"நீங்கலரும் குணம் சேர்ந்திடும் ஞாயிறு போல.."-பா.27, "வெற்றுரைகள் கடல்சுருதிப் பிடிப்பன்ன" பா.27, "மாமலையிலென மண்சத்தி"- பா.16 என்பது போன்ற உவம உருபுகளைக் குறிப்பிடுகின்றார்.

## உருவக அணி

உவமை அணிக்கு அடுத்து சிறப்புப் பெறுவது உருவக அணியாகும். உவமை அணியின் வளர்ச்சி நிலையே உருவகமாகும். உவமை முதல் நிலை. அதன் முந்திய நிலை உருவகமாகும். உருவகத்தைப் பொருள் உவமையோடு ஒன்றி விடுவது என்று கூறலாம்.

**உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்**
**தொன்றென மாட்டின்அஃதுருவக மாகும்**

என உருவகம் பற்றித் தண்டியலங்காரம் கூறுகிறது. இந்நூலில் உருவகங்கள் மூலம் முருகனின் பெருமைகள் கட்டமைக்கப் படுகின்றன. முருகப்பெருமான் உலகைப் படைத்த ஆதிமூலமாக இருந்தும், இப்போது சிறு பிள்ளையாக ஆடுவதால் அவரை "மயிலைமலை வளர்கருவா" -பா.16 என்று உருவகிக்கிறார். அதாவது இறைவன் ஒரு வளர்ந்து கொண்டிருக்கும் கருவடிவம் (உவமை) போல எல்லையற்ற ஆற்றலைத் தன்னகத்தே கொண்டவர் என்று குறிப்பிடுகிறது. மேலும் பாதுகாப்பு அளிக்கப்படும் இடத்தை வெறும் உறை என்று சொல்லாமல் "கண்ணுறை" -பா.16 என்று உருவகிக்கிறார். இங்கு அந்தப் பாதுகாப்பு இடமே கண்ணைப் போல மிக முக்கியமானதும், பேணத்தக்கதும் ஆனது என்று உருவக நயம் காட்டப்படுகிறது.

## தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழ்கின்ற நிகழ்ச்சி மீது கவிஞர் தம் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றம் எனப்படும். இந்நூலில் சாதாரணமான பிள்ளைத் தமிழ் விளையாட்டு எப்படி மகத்துவம் பெறுகிறது என்பதைக் காணலாம். குழந்தை விளையாடும்போது தாய்மார்கள் கெட்டவை நீங்க மண்ணை எடுத்துச் சுத்தி மோர்ந்து பார்ப்பது என்பது தமிழ்க்குடும்பங்களில் நடக்கும் ஓர் இயல்பான சடங்கு ஆகும். கவிஞர் இந்தச் செயலை, மாமலையிலென மண்சுத்தி மோர்ந்தது போன்"- பா.16 என்று ஒப்பிடும்போது, அங்கே தன் கருத்தை ஏற்றுகிறார். அதாவது இந்தச் செயலைச் செய்பவன் வேறு யாருமில்லை. அவனே உலகைப் படைத்த பழமை பன்னிரு பங்காளன்" ஆவான். உலகத்தின் ஆதிமூலமே இப்போது ஒரு சிறு பாலகனாக வந்து, அந்தச் சடங்குச் செயலை தன் விருப்பத்தால் செய்து நாடகமாடுகிறான் என்ற கருத்தை அந்த இயல்பான செயல்மீது ஏற்றிப் பாடுகிறார்.



## வேற்றுப்பொருள் வைப்பணி

வேற்றுப்பொருள் வைப்பணி என்பது ஒரு கவிதை அடியில் சொல்லப்பட்ட சிறப்பான கருத்தை, அதற்கு அடுத்த அடியில் சொல்லப்பட்ட பொதுவான ஒரு கருத்தைக் கொண்டு நிறுவுவது அல்லது உறுதிப்படுத்துவது ஆகும். இது ஒரு கருத்தின் உண்மைத் தன்மையை நிருபிக்க, உலகறிந்த பொதுவிதியைத் துணைக்கு அழைக்கும் அணியாகும்.

ஒரு அடியாரின் மேன்மையை விளக்கும்போது இந்த அணி சிறப்பாக பயன்படுத்தப்படுகிறது. கவிஞர் முதலில், பொறையுளன் புரைசேரும் வீழ்கனில் வாழ்ந்திடும்"-பா.27 என்று பொறுமையுடன் மற்றவர் செய்த பிழைகளையும் குற்றங்களையும் நீக்கும் அடியார்கள் இறையருளில் நிலைத்து வாழ்வார்கள் என்ற சிறப்பான கருத்தைக் கூறுகிறார். இது எல்லாருக்கும் பொருந்தாத ஒரு தனிப்பட்ட ஆன்மீக நிலை. இந்த சிறப்பான கருத்தை மெய்ப்பிப்பதற்காக அடுத்து "ஒதுங்கும் நல்மணிப் பதன்போல அன்பரின் நெஞ்சில் இறைவிறைந்தே" என்ற பொதுவான கருத்தைத் துணைக்கு வைக்கிறார். அதாவது தூய்மையான இரத்தினம் போல குறைகளை நீக்கித் தூய்மையுடன் இருப்பவர்களுக்கே எப்போதும் உலகியலிலும் மேன்மை கிடைக்கும். இவ்வாறு அடியார்களின் ஆழமான ஆன்மீக நிலைப்பாட்டை இரத்தினத்தின் மேன்மை என்ற அனைவரும் அறிந்த உலகியற் பொதுவிதியைக் கொண்டு உறுதிபடுத்துவதே வேற்றுப்பொருள் வைப்பணியின் நயமாகும்.

## முடிவுரை

மயிலம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் அணிசிறப்பு மிக்க பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. உவமை அணியினை மரபு நிலையிலும் புதுமைத் தன்மையோடும் கையாண்டுள்ளார். உவமஉருபோடும் அல்லாமலும் பல உவமைகளைப் படைத்துள்ளார். இயற்கை நிகழ்ச்சியைப் பல இடங்களில் உவமையாகக் கையாண்டுள்ளார். உருவகம், தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள் வைப்பணி ஆகிய அணிகளை மிகச் சிறப்பாக கையாண்டுள்ளார். இவ்வணிகள் அனைத்தும் இந்நூலுக்குச் சிறப்பைத் தருவதாகவும், படிப்போருக்கு இன்பம் பயப்பதாகவும் அமைந்துள்ளன.

Scanned with CamScanner

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை அறிவியல் கல்லூரி, மயிலம்-604 304
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை-605 014

## மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம்

# நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கம்

# சான்றிதழ்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி, மயிலம் மற்றும் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை இணைந்து (17.10.2025, 18.10.2025) நடத்திய மயிலம் பொம்மபுர ஆதீனம் 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் நூற்றாண்டு விழா பன்னாட்டுக் கருத்தரங்கத்தில்

முனைவர் த. கீதாஞ்சலி, உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை

நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி அவர்கள்

சிறப்புரையாற்றினார்/ஆய்வுரை வழங்கினார்/பங்கேற்றார்.

முனைவர் மு. கருணாநிதி
பேராசிரியர் & தலைவர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

முனைவர் ச. திருநாவுக்கரசு
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை அறிவியல் கல்லூரி, மயிலம்.

Scanned with CamScanner